பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

சுவர்: 19 ஐப்பசி 29 ஜு:ஹஜ் 2 இதழ் 274
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-11-77

மெய்கண்[illegible]ன்
நட்சத்திர[illegible]மா,
கலாவல்[illegible]
எமது பிரபல வெளிய[illegible] நட்சத்திரமாமா, கலாவல்[illegible] தேவையானோர் தங்கள் ஆடர்களுக்கு எமது இளையு டன் தொடர்புகொள்ளவும்.
144, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்
பேன்: 236 7657

லாலா தயாரிப்பு
புதிய முறையில்
சண்சைன்
சோப்
தயாரிக்கப்பட்டு இலங்கை பூராவும் விற்பனையாகின்றன, வாங்கிப் பாவியுங்கள்.
லாலா சோப் தொழிற்சாலை
புத்துவேலி.

# மாவட்ட மந்திரிப் பதவியை கூட்டணி ஏற்குமா?

## தமிழ்ப்பகுதி விருத்திக்கு அவசியமென வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் நியமிப்பதற்கு உத்தேசித்துள்ள மாவட்ட மந்திரிப்பதவியைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்கவேண்டுமென்ற கோரிக்கை கூட்டணிக்குள்ளும் கூட்டணி அபிமானிகள், ஆதரவாளர்கள் மத்தியிலும் வலுப்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

தொகுதிகளின் அபிவிருத்தி சம்பந்தமாக அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தலாமென்றால் தொகுதிகளை உள்ளடக்கிய மாகாண அபிவிருத்திக்காக மந்திரிப்பதவியை ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறதென்ற கேள்வி கூட்டணி இளம் வட்டத்தினுள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

[illegible] தமிழ் ஈழத்தையடைய முடியாமல் போனதற்குத் தமிழ்ப்பிரதேசம் போருளாதாரத்தில் அபிவிருத்திஅடையாமல்போனதே

[5-ம பக்கம் பார்க்க]

## கந்தர்மடம் கொள்ளை: ஒருவர் கைது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அரசடிவீதிக் கொள்ளை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசடி வீதியைச் சேர்ந்த வீடொன்றில், துப்பாக்கி காட்டி சுமார் 22,000 ரூபா பெறுமதியான நகைகள் முகமூடி இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

வீட்டிலிருந்த 10 வயதுச் சிறுவனின் கழுத்தில் துப்பாக்கியைக் குறிவைத்துப் பயமுறுத்தி, அலுமாரிச் சாவியை வாங்கி அதிலிருந்த நகைகளை இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த சமயம் வீட்டில் பெண்கள் மட்டுமே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுத்தால் குழந்தைக்கு ஆபத்து என முகமூடி இளைஞர்கள் எச்சரித்துச் சென்றதால் வீட்டுக்காரர் இச்சம்பவம்பற்றி பொலிஸாருக்கு தெரிவிக்கவில்லை. அயலவர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைசெய்து சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (க-அ)

## இவர்களின் இடமாற்றம் ரத்து

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கோண்டாவில் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. என். தியாகராசா, உதவி அத்தியட்சர் திரு. எஸ். சொக்கலிங்கம் ஆகியோரின் திடீர் இடமாற்றங்கள் தலைமைப் பீடத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

திரு. தியாகராசா மதவாச்சிக்கும், திரு. சொக்கலிங்கம் கொழும்புக்கும் திடீர் இடமாற்றம் செய்யப்

[6-ம் பக்கம் பார்க்க

## ஈழத்தமிழர் பிரதேசம் பற்றி லண்டனில் மகாநாடு

[லண்டன்]

இலங்கைத் தமிழர் வாழும் பிரதேசம் பற்றிய ஆய்வுமாநாடொன்று லண்டனில் நடைபெறவிருக்கிறது.

78-ம் ஆண்டு ஜனவரி 3-ம் திகதி ஆரம்பமாகும் இம் மாநாடு 4 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

இம்மாநாட்டில் ஈழமும் சர்வதேச சட்டமும், மனித உரி

(6ம் பக்கம் பார்க்க)

★ ஆர். எஸ். அச்சகத்தின் மற்றொரு கிளை ★

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இன்று (14-11-77) திங்கட்கிழமை
பகல் 12-00 மணிக்கு குதூகலமாகத் திறந்துவைக்கப்படும்.
வாடிக்கையாளர்கள், அபிமானிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆர். எஸ். அச்சகம்

தலைமையகம்: 119, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 270 A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7669 7665

உ
சிவமயம்

ஆரம்ப விழா அழைப்பு

★ மல்ரி-ஒயில் இன்டஸ்ரீஸ் லிமிட்டட் ★

Multi-Oil Industries Limited

காங்கேசன்துறை வீதி, ... இணுவில்.

காலம்: 14-11-77 திங்கட்கிழமை. நேரம்: காலை 5-30 மணி முதல் 6-00 மணி வரை.

தங்களைச் சுற்றம்சூழ வருகை தந்து வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

கே. கனகராசா ஜே. பி. (மில்க்வைற்) (அக்கிராசனர்)
எஸ். பி. நடராசா (அண்ணா தொழிலகம்) (நிர்வாக அதிபதி)
ஐ. பாலசுப்பிரமணியம் (செயலாளர்)

## விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் அரிசி மில் விற்பனைக்குண்டு. 2 மோட்டர் 10 H. P. 7 1/2 H. P. அலர் 3. கிரைண்டர் 1. விபரங்களுக்கு: 36, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 7647

ரேப் ரெக்கோர்டர் (சீரியோ), கசெற் ரேப்ரெக்கோர்டர், கென்வூட் ஸ்டான்ட் பான் (நஷனல்), மின்சார அயன், கமெரா, சுவர் மணிக்கூடு போன்ற வெளிநாட்டுப் பொருட்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள: 16, மடம் வீதி, யாழ்ப்பாணம். 7664

## தேவை

சான்றிதழ் பெற்ற பயிற்றப்பட்ட அனுபவமுள்ள (O. S. C. M.) மருத்துவ மாது தேவை. உடன் விண்ணப்பிக்கவும் சம்பளம் அர்சாங்க விதியின்படி. The Jaffna Polyclinic. 61 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7656

# வரி விளம்பரம்

## தேவை

பிளாஸ்றிக், நைலோன் முதலிய பொருட்களைக் கொண்டு கூடை பூவேலைகள் செய்வதில் இரண்டு கிழமைக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க ஆசிரியை தேவை. எதிர்பார்க்கும் வேதனத்துடன் தராதரம், அனுபவம் என்பனவற்றைக் குறித்து விண்ணப்பிக்கவும். நிர்வாகி, ராஜகிரி கல்வி நிலையம், பருத்தித்துறை. 7652

தேநீர்க் கடைக்குச் சகல பலகார வகைகள் செய்யக் கூடிய ஓர் சமையல் ஆளும், ஓர் உதவியாளரும், இரு பரிமாறுகிறவர்களும் தேவை. உடன் நேரில் வரவும். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். இ கனகலிங்கம், ஆஸ்பத்திரிக்கு முன், இணுவில். 7659

## சேவை

பனம்விதைகளை நட்டுப் பனையபிவிருத்தி செய்ய விரும்பும் அன்பர்களுக்குக் கிளிநொச்சித் தொகுதியின் பல் வேறிடங்களில் 15-11-77 செவ்வாய்க்கிழமை பனம்விதை விநியோகம் செய்கிறோம். தேவையானோர் முன்னரே தொடர்பு கொள்ளவும். மில்க்வைற் தொழிலகம், தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம். 7663

## விவசாயப் பயிற்சி

16-22 [illegible] இருபாலாருக்கும் [illegible] பொது விவசாயப் பயிற்சிகள், சாதனை/போதனை முறைகளுக்கு ஊதியம்/வேதனம் என்ற அடிப்படையில் நற்சாட்சிப் பத்திரம், சான்றிதழ்களுடன் உடனடியாக நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிறுவனம், மருதனமடம். (இணுவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்). 7650

## தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் அரசினர் கூட்டு ஸ்தாபனத்தால் நடாத்தப்படும் மரக்காலையில் விறகு இல்லாது மக்கள் பெரும் கஷ்டம் அடைகின்றனர்.

## புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்(வரை)

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

மேற்படி சங்கத்தின் 10,000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்வதற்கு இருக்கின்றது. கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்கு 5/-வும், வைப்புப் பணமாக 50/-வும் செலுத்தப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 19-11-77 மு. ப. 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் என்வலப்பின் இடதுபக்க மூலையில் ''கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டு பொது முகாமையாளர், புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு எனக் குறிப்பிடப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
7660

# விளம்பரம்

## விசேட ஆணையாளர் அலுவலகம்
### வல்வெட்டித்துறை நகரம்

## வழங்குநர்களைப் பதிவுசெய்தல் — 1978

பின்வரும் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 1978'' எனக் குறிப்பிட்டு 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ந் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

| விடயங்கள் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. எழுதுகருவி வகை | 25/- | 10/- |
| 2. அலுவலக உபகரணங்கள் | — | — |
| 3. தளபாடங்கள் | — | — |
| 4. கோலவுடைகளும், கோலவுடைகளுக்கான பொருட்களும் | — | — |
| 5. அச்சிடுதல் | 25/- | 10/- |
| 6. சேவை இணைப்புக்கள், விநியோகக் கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியவற்றுக்கான மின்பொருட்கள் | 50/- | 10/- |
| 7. மலகூட, தோட்டிவேலை களஞ்சியப் பொருட்கள் மலகூட வாளிகள், துப்புத்தடிகள், ஈக்குக்கட்டுகள் கிருமிநாசினிகள் முதலியன | 25/- | 10/- |
| 8. உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் | — | — |

### சேவைகள்

1. வீதிகளையும் கட்டடங்களையும் பழுது பார்த்தலும் பேணலும்.
2. மோட்டார்வாகனங்களை, உழவு இயந்திரங்களை நன்னிலையில் வைத்திருத்தலும் பழுதுபார்த்தலும்.
3. தோட்டிவேலைக்கான, மலகூட வேலைக்கான வண்டிகளுக்கு அல்லது கொண்டுசெல்வதற்குரிய ஏனைய உபாயத்திற்கு ஏற்பாடு செய்தல்.
4. மலகூட தோட்டி வேலைக்குரிய வண்டிகள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் முதலியன பழுதுபார்த்தல்.

2. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணப்படும் பட்சத்தில் வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்குண்டு. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவாணை விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விவரக்கூற்றுகளுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ்செய்யப்படும்.

ஜீ. எஸ். கந்தசாமி,
விசேட ஆணையாளர்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துலை,
07-11-1977. 7655

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை கிழக்கு.
கதிரவேலு செங்காதரம்பிள்ளை
வழக்காளி

இல. M. B/8266

எதிராக

சங்கானை மில் லேன்
1. முருகுப்பிள்ளை தம்பையா
2. பெண் இராசேஸ்வரி
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B/8266-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 23-ந் திகதி (23-11-77) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 3865/-ம் இதில் ரூபாய் 2000/-க்கு 30-6-66 திகதி தொடக்கம் 6-8-68 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 307/-ம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை ''மில்லாக்கடவை'' நிலப்பரப்பு 4½ம், கட்டிடங்களும், கிணறும், பயிர்களும் எல்லை கிழக்கு கணபதி மகன் ஆச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு செல்லப்பு கைம்பெண் செல்லமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு கை ஒழுங்கையும், அம்பலம் செல்லையாவுக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம் தெற்கு நல்லதம்பி பெண் இராசம்மாவின் உரிமைக்காரருக்கும் பங்களருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

முற்பதிவு E 178/161

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
20-9-1977. 7662

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: MB/14473

1. சண்முகநாதன் ஸ்ரீரங்கநாதனும் பெண்
2. கமலாதேவியும் - கட்டுடை மானிப்பாய் வழக்காளி

எதிராக

1. வ. சொக்கலிங்கம் ஆச்சாரி இராமசாமி
இல. 174, நாவலர் ரோட்டு,
வண்ணார்பண்ணை கிழக்கு,
யாழ்ப்பாணம். எதிராலி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/14473ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1977ம் ஆண்டு மார்கழி மீ 7ம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 27,290/-ம் 30-7-74 தொடக்கம் 28-11-74 வரைக்கும் ரூபாய் 25,000-/க்கு 11 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 686/14ம்; இதில் முன் எதிராளி கட்டிய ரூபா 8562/50ஐ நீக்கி.

### ஆதன விபரம்

வடமர்காணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை ''சிறுபுலமும் உயிலடியும்'' நி. பர. 4ம் கல்விடும், அடுக்களையும், கிணறும், புதிதாகக் கட்டியிருக்கும் மறு கட்டிடங்களும். இந்தப் பரப்பு நாலுக்கும் எல்லை கிழக்கு இராமலிங்கம் நல்லதம்பியின் ஆதனத்துக்குப் போகும் பாதை. வடக்கு நாவலர் ரோட்டு, மேற்கு இளையதம்பி வயித்திலிங்கத்தினுதனம், தெற்கு இராமலிங்கம் நல்லதம்பியினுதனம். இதடங்கலும் இதற்குட்பட்ட சகலதும்.

ஜே. ஏ. எட்வேட்
கொமிஷனர் & விலை மதிப்பாளர்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
7-11-77. 7666

## ''ஆசிரியர் நியமனத்தில் முன்னுரிமை வழங்குக''

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நியமனத்தில் முன்னுரிமை அளிக்கும்படி தேசிய கணித - விஞ்ஞான மாணவர் மன்றத்தினர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட உயர்தேசிய கணித-விஞ்ஞான உயர் கற்கைநெறியைப் பயிலும் நாங்கள் அனைவரும் தரப்படுத்தலினால் பாதிக்கப்பட்டு பல்கலைக்கழக அனுமதியை இழந்தவர்கள். ஆசிரிய நியமனத்திற்கான தகைமைகள் அனைத்தும் எங்களுக்கு இருந்தபோதிலும் கடந்த ஐந்து வருடங்களாக எங்களுக்கு எதுவித நியமனமும் வழங்கப்படவில்லை. பலதரப்பட்ட பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியிலேயே நாங்கள் இக்கற்கை நெறியைப் பயிலுகின்றோம்.

இக்கற்கைநெறியானது உயர் வகுப்புகளுக்கான ஆசிரியர்களை உருவாக்கும் நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டதெனவும் இக்கற்கைநெறியின் முதலாவது வருடத்தை நாங்கள் அனைவரும் பூர்த்திசெய்துள்ளதாகவும். இம்மகஜரில் மேலும் தெரிவித்துள்ளனர்.

(கி. க,

## பீடிக் கைத்தொழில் கூட்டுறவு மயமாகும் தொழிலாளருக்கும் நிர்வாகத்தில் பங்கு

(யாழ்ப்பாணம்)

''பீடிக் கைத்தொழில் கூட்டுறவுமயமாக்கப்படுகின்றது. இனிமேல் தனியார்துறையினருக்கு இத்தொழிலை நடாத்துவதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது. இதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

தனியார்துறை வரி பீடிக் கைத்தொழிலில் ஈடுபட்ட ஊழியர்களுக்குப் பொருத்திய வேதனம் வழங்குவதில்லையெனவும் குறிப்பாக பீடி சுற்றும் பெண்களுக்கு மூன்று நான்கு ரூபாய்மட்டும் வழங்குவதன் மூலம் லாபம் அடிக்கிறார்கள் எனவும் செய்யப்பட்ட புகார்களை அடுத்து பீடிக் கைத்தொழிலைக் கூட்டுறவுமயமாக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

''பீடி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சாதாரண தொழிலாளர்களைக்கொண்ட கூட்டுறவுச்சபை அமைக்கப்பட்டு அவர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு ஏற்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.''

(கி-அ)

### தமிழகத்தில் கடும்புயல்:

# மீனவர் குடிசைகள் பாதிப்பு

## ரயில், மின் சேவைகள் துண்டிப்பு

சென்னை, நவ. 13
கடும் புயல் காரணமாக தமிழ்நாட்டின் பல பாகங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

நாகபட்டினத்தில் கடும் புயலால் மின் துண்டிப்பும் பலத்த சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

சோழ மண்டலக் கரையில் நீர் நடுமையாக சூழ்ந்ததால் ரயில்சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஆயினும் சென்னையில் இருந்து மேற்கு நோக்கி ரயில் சேவை நடைபெறுகிறது.

வடசென்னையில் சில இடங்களில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் 40,000 குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### 4 பேர் காயம்

வடசென்னையில் குடிசை ஒன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததால் 4 பேர் காயமடைந்தனர். செங்கப்பட்ட மாவட்டத்தி 20 மீனவர்வீடுகள் நீரில் மூழ்கின.

நாகபட்டினம், திருத்துறைப் பூண்டி, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க பெரும் சேதங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

செங்கப்பட்டு மாவட்டத்தில் மீனவர் குடிசைகள் மூழ்கியதால் உயிர்ச் சேதம் ஏற்பட்டதா என்பது பற்றி தகவல் எதுவும் இல்லை.

பாண்டிச்சேரியில் புயலால் 5 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு நிவாரணம் வழங்கி துரித நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

### எம். ஜி. ஆர் ஆலோசனை

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இதுபற்றி வருவாய்த் துறை வாரியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினர். உணவு அமைச்சர் திரு. எட்மன்ட் வருவாய்த்துறை வாரியத்தின் மூத்த உறுப்பினர் ஒருவர் ஆகியோரை முதல்வர் மாவட்ட கலெக்டர் சகிதம் விமானத்தில் அனுப்பிவைத்தார். (உ)

## துப்பாக்கிச் சூடு பற்றி மட்டுமே விசாரணை

### எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, நவ. 13
சென்னையில் நிகழ்ந்த துப்பாக்கிப்பிரயோகம் பற்றி மட்டுமே விசாரணை நடத்தப்படும் என தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அறிவித்துள்ளார்.

நிதியமைச்சர் நாஞ்சில் மனோகரன் வெளியிட்ட அறிக்கையில் தமிழ்நாடு முழுவதும் நடந்த வன்செயல்கள் பற்றி விசாரிக்க கமிஷன் நியமிக்க முதல்வர் திட்டமிட்டுள்ளார் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்போது முதல்வரின் கூற்றுப்படி சென்னை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பற்றி மட்டுமே கமிஷன் விசாரணை செய்யவுள்ளது. (கி-உ)

## 40 கோடி மக்களுக்கு போஷாக்கில்லை!

ஜகார்த்தா, நவ. 13
உலகில் 40 கோடிக்கு மேற்பட்ட மக்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவல் தற்போது இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் ஐக்கியநாடுகள் உணவு விற்பனவு ஸ்தாபனத்தின் 19-வது வருடாந்த மகாநாட்டில் வெளியிடப்பட்டது.

இம்மகாநாடு நேற்று ஆரம்பமானது.

இந்தோனேஷிய விவசாய அமைச்சர் திரு. அதிவித்யாகா கூட்டத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவர் தமது உரையின் போதே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

வளர்முக நாடுகளின் விவசாயத் திட்டம் குறித்து இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடகொரியா, அங்கோலா, மொசாம்பிக் முதலிய நாடுகளும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டன.

### சீனு முன்மாதிரி

ஸ்தாபனத்தின் தலைவர் திரு.சலூமா தமது உரையில், "உலகநாடுகள் தமது சொந்த வளங்களிலேயே தங்கி நிற்க வேண்டும் என்றும் இதற்கு சீனதேசம் முன்மாதிரியாக விளங்குகிறது என்றும் கூறினர்.

136 நாடுகள் கலந்துகொள்ளும் இம்மகாநாடு டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறும். (உ)

## பொலிஸ் துப்பாக்கிச்சூடு: கமிஷன் நியமனம்

சென்னை, நவ. 13
தமிழ் நாட்டில் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டிய சம்பவத்தில் இடம்பெற்ற பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி விசாரணை செய்வதற்கு விசாரணைக்கமிஷன் ஒன்றை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

நீதிபதி திரு. வி. எஸ். சோமசுந்தரத்தை ஆணையாளராகக்கொண்ட இக்கமிஷன் 3 மாத காலத்திற்குள் தனது விசாரணை அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தமிழக அரசு பணித்துள்ளது. [இ]

## குழந்தை இலக்கியத்தில் எழுத்தாளர் பணி

### அழ. வள்ளியப்பா விளக்கம்

சென்னை, நவ. 13
"குழந்தைகளுக்குப் பயன்படும் வகையிலான நூல்கள் பெருமளவில் வரவேண்டும். இந்தவகையில் எழுத்தாளர்களின் கடமை தலையாயது" என்று குழந்தை இலக்கிய இயக்க 5-வது மாநாட்டில் உரையாற்றுகையில் இயக்கத் தலைவர் திரு. அழ. வள்ளியப்பா கூறினர்.

இம்மாநாடு சென்னையில் நடைபெற்றது.

குழந்தை புஸ்தக டிரஸ்ட் ஒன்று அமைப்படவேண்டும் என்று அவர் தமிழ்நாடு அரசிடம் வேண்டுகோள்விடுத்தார்.

அவர்தமது உரையில்மேலும் கூறியதாவது: "குழந்தைகள் இளம் பருவத்திலேயே படிக்க வேண்டும். பின்னர் கல்வி புகுவது கடினம். குழந்தைகள் நலன் கருதி கலைமன்றங்கள் அமைக்கப்படல்வேண்டும்."

ஏ. வி. எம். முருகன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இந்த இயக்கம் 360 நூல்களுக்குமேல் வெளியிட்டுள்ளது என்ற தகவலும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## திருட்டில் பெண் பொலிசார்?

சென்னை, நவ. 13
தியாகராஜநகர் பழக்கடை வியாபாரியும் தி. மு. க. செயலாளருமாகிய ஜெயராமனின் வீட்டைச் சோதனையிட்ட பெண் பொலிசார் நீண்ட நேரச் சோதனையின் பின்னர் எதுவும் எடுத்துச் செல்லவில்லை என எழுதிக் கொடுத்தனராம்.

ஆனால் திருமதி ஜெயராமன் பீரோவைத் திறந்து பார்த்த பொழுது அவரின் குழந்தையின் 2 பவுண் சங்கிலியையும் ரேஷன் கார்ட்டையும் காணவில்லையாம்.

இதுபற்றி பொலிஸ் அதிபருக்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார். (கி-உ)

## சிறையில் தற்கொலை

லண்டன், நவ. 13
மேற்கு ஜெர்மன் கொமாண்டோ தலைவர்களில் மற்றொருவரும் சிறையில் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

படுக்கை விரிப்பைப் பயன்படுத்தி இவர் நேற்று தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. இவருக்கு 19 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

சிறையில் இதற்கு முன்னரும் கொமாண்டோ தலைவர்கள் 6 பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## டைனமைட் வெடித்து 50 பேர் பலி!

லண்டன், நவ. 13
தென்கொரியாவில் 'டைனமைட்' மருந்து களைக் கொண்டு சென்ற ரயில் தீப்பிடித்ததையடுத்து இடம்பெற்ற வெடிவிபத்தில் 50 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும் ஆயிரம் பேர் காயமடைந்தார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

ரயில் பாதையின் அருகே குளிருக்காகத் தொழிலாளர்கள் மூட்டிய நெருப்பிலிருந்து இத்தீ பரவியதாகவும் இந்த வெடிவிபத்தினால் ஸ்தலத்திற்கு 5 மைல் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல கட்டிடங்கள் சேதமடைந்தன என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## கியூபாவினால் ஆபிரிக்க அமைதிக்குப் பங்கம்

வாஷிங்டன், நவ. 13
கியூபாவின் துருப்புகளும், ஆலோசகர்களும் ஆபிரிக்காவில்இருப்பதனால் அங்கு அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிறது என்றுஅமெரிக்கஜனாதிபதிதிரு. ஜிம்மி கார்ட்டர் கூறியுள்ளார்.

அங்கோலாவில் 20,000 கியூபா துருப்புகள் இருக்கின்றன என்றும் அவர் சொன்னார். (உ)

## எகிப்திய அதிபருக்கு இஸ்ரேல் வர அழைப்பு

லண்டன், நவ. 13
மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான சமாதான நடவடிக்கையின் பொருட்டு இஸ்ரேலுக்கு விஜயம் செய்யுமாறு இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் எகிப்திய ஜனாதிபதிக்கு உத்தியோக பூர்வ அழைப்பு விடுத்துள்ளார்.

மத்திய கிழக்குப் பிரச்னைசுமூகமாகத் தீர்க்கப்படுவதற்காக அவசியமாயின் இஸ்ரேலுக்கு விஜயம் செய்வதற்கும் தாம் தயார் என்று எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அறிவித்திருந்தார் என்பதுதெரிந்ததே. (உ)

## கலைஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்!

சென்னை, நவ. 13
திருமதி இந்திரா காந்தியை கொலைச் சதி செய்தார்களென கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதியும் மற்றும் தலைவர்களும் நீதிமன்றத்தில் நாளை ஆஜர் செய்யப்படுவர்.

அவர்கள்மீதான குற்றப் பத்திரிகைகள் அவர்களுக்குக் கையளிக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. (கி-உ)

## கலைஞருக்காக உண்ணுவிரதம்

சென்னை, நவ. 13
நாங்குனேரியில் கலைஞர் கருணாநிதியை விடுதலை செய்யக் கோரி இருவர் உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர்.

இவர்கள் பசியால் மயக்கமடைந்த நிலையில் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் காவலில் வைக்கப் பட்டுள்ளனர். (கி-உ)

## தமிழர் பண்பாட்டுக்கழக தலைவர் இங்கு வருகிறார்

(யாழ்ப்பாணம்)
உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. இரா. த. வீரப்பன் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கழகம் சென்னையில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பண்பாட்டு கழகவிழாவில் கலந்துகொள்வதற்காக மலேசியாவிலிருந்து சென்னை செல்லும் வழியில் இலங்கையில் ஒரு வாரம் தங்கிச் செல்வார்.

திரு. வீரப்பனை கட்டுநாயக்கா விமான நிலயத்தில் உலகத் தமிழர் பண்பாட்டுக் கழக இலங்கை கிளைத் தலைவர் திரு. இரா. கனகரத்தினம் வரவேற்பார். இவர் யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, கண்டி ஆகிய இடங்களுக்குச் சென்று சில நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவார். (செ)

### மதுபோதையில் இருந்த வாலிபர்கள்

## பொலிசைக்கண்டதும் தப்பி ஓட்டம்

(நெல்லியடி)
நெல்லியடிப்பகுதி வீதிகளில் மதுபோதையில் நின்ற வாலிபர் சிலர், பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம் பிடித்தார்களாம்.

இந்த இளைஞர்களிடம் வாள் போன்ற பயங்கர ஆயுதங்கள் இருக்கக் காணப்பட்டதாம்.

பொதுமக்களில் சிலர் தொலைபேசி மூலம் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து வந்தார்கள்.

பொலிஸார் அநாதரவாகக் கிடந்த வாள் ஒன்றையும், ஒரு துவிச்சக்கர வண்டியையும் கைப்பற்றியுள்ளனர். இளைஞர் ஒருவர் வீடொன்றின் ஊடாகத் தப்பியோடுகையில் அவ் வீட்டுக் கிணற்றில் விழுந்து விட்டார். ஊர் மக்கள் இளைஞரைக் கிணற்றிலிருந்து வெளியே மீட்டெடுத்தனர்.

## தபால் ஊழியர் தாக்கப்பட்டு படுகாயம்

(பண்டத்தரிப்பு)
பனிப்புலத்தைச் சேர்ந்த தபால் ஊழியர் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த சிலரால் தாக்கப்பட்டு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் பலத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் என். கதிரவேலு என்னும் இந்த தபால் ஊழியர் கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது இருவர் வழி மறித்து தாக்கி படுகாயம் விளைவித்ததாகச் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர்களைத் தேடி சங்கானைப் பொலிசார் வலை விரித்துள்ளனர்.

## நீடிக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)
தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து பண்டத்தரிப்புவரை சேவையில் ஈடுபடும் 789-ம் இலக்க பஸ் சேவையை மாதகல் வரை விஸ்தரிக்குமாறு மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தினர் யாழ்ப்பாணம் இ. போ. ச. பிரதேச அத்தியட்சகருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில்வேண்டியுள்ளனர்.

# தெற்கே எழுந்துள்ள புதிய குரல் தமிழருக்கு நம்பிக்கை தருகிறது

## ரோகண விஜேவீர, வாசுதேவ கருத்துக்கள் பற்றி வி. பி. மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

''சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பதன்மூலமே விமோசனம்பெறலாம் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பேரிடி விழுந்துள்ள இவ்வேளையில் தெற்கில் இருந்து இளம் இடதுசாரித் தலைவர்களான திரு. வாசுதேவ நாணயக்கார, திரு. ரோகண விஜேவீர ஆகியோர் வடிவில் வெளிவந்துள்ள புதிய குரல் நம்பிக்கையூட்டுவதாக உள்ளது.''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி பொன்னம்பலம் கூறினார்.

காரைநகர்மறுமலர்ச்சிமன்ற சிறுவர்தின விழா காரைநகர் இந்துக்கல்லூரி நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு. வி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேசுகையிலேயே திரு. வி. பி. மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

சுவீடனைச் சேர்ந்த யு. என். எப். ஸ்தாபன சமூகசேவைப் பிரதிநிதி திரு. பி. ஏ. அன்டர்சனும் இவ்விழாவில் சமுகமளித்திருந்தார்.

திரு. வி. பி. தமது உரையில் மேலும் கூறியதாவது;

### சமூகத்தின் கடமை

''குழந்தைகளின் உடல், உளவளர்ச்சிக்கு உரிய நல்ல சூழலை உருவாக்குவது சமூகத்தின் கடமையாகும்.

சோஷலிச நாடுகள் பல குழந்தைகள் வளர்ப்பில் நமக்கு முன்மாதிரி காட்டுகின்றன. இந்தவகையில் சோவியத் யூனியன் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கது.

மேற்படி சோஷலிச நாடுகளில் பிறக்கும் குழந்தைகள் வாழ்ந்து இறக்கும்வரை மருத்துவ அறிக்கைகள் தவறாது ஒழுங்காகத் தயாரிக்கப்படுகின்றன. இப்பிள்ளைகள் வளர்ந்து தொழிற்சாலையிலோ அல்லது அரசாங்க நிறுவனங்களிலோ கடமை புரிந்து இறுதிக்காலம் வரை தனித்தனி மருத்துவ அறிக்கைகள் தயாரிக்கும்முறை குழந்தைகளின் நலன்கருதியும் சமூகத்தின் முன்னேற்றம்கருதியும் முதல்தடவையாக சோவியத் யூனியனால் கடைப்பிடிக்கப்பட்டது.

### மருத்துவ அறிக்கை

குறிப்பிட்ட ஒரு பிள்ளை ஜனித்ததிலிருந்து இறக்கும் வரை எந்த எந்த நோய்களால் பீடிக்கப்பட்டது? என்ன மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன என்ற விபரங்கள் அந்த மருத்துவ அறிக்கைகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

பாடசாலைகள், தொழிற்சாலைகள் உட்பட சகல ஸ்தாபனங்களிலும் இதன்பொருட்டு மருத்துவ பிரிவுகள் அமைக்கப்பட்டு அவற்றில் டாக்டர்கள், தாதிமார் கடமை புரிய அரசினால் அமர்த்தப்பட்டுள்ளனர், இதற்கு கடமைநேர லீவும் உண்டு. இம்முன்மாதிரியான வழியை நாமும் கடைப்பிடித்தல் நலம்.

### ஒருவேளை உணவு

நம் நாட்டில் 30 பிள்ளைகள் உண்ணும் ஒருவேளை உணவில் உள்ள போஷாக்குச் சக்திக்கு அமெரிக்காவில் உள்ள ஒரு பிள்ளையின் ஒருவேளை உணவில் உள்ள போஷாக்குச் சக்தி நிகரானது.

கிழக்கு, மேற்கு நாடுகளில் வாழும் மக்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்ற உலக சுகாதார நிறுவனம் உழைத்துவருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 149 நாடுகளில் 100க்கு மேற்பட்ட வளர்முக நாடுகள் பட்டினி எல்லைக்கு உட்பட்டவையாகவே உள்ளன.

இப்பாதிப்பு நிலை நீங்க எமது நாட்டிற்கும் நல்ல வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

### இலங்கையில்

இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் மட்டுமல்லாது ஏனைய பாகங்களிலுமான 60 வீகிதம் சாதாரண ரீதியிலான குழந்தைகளே உள்ளனர். இவர்களுக்குச் சரியான வாழ்க்கை வசதிகள் அமையவேண்டும்.

இந்த வகையில் பெற்றோரின் பழக்கவழக்கங்களும் குழந்தைகளின் நலனுக்கு அத்தியாவசியமானவை.

### சர்வதேச சகோதரத்துவ உணர்வு

இக்குறைகளை நீக்குவதற்கு உலக நாடுகள் பல வளர்முக நாடுகளுக்கு உதவிவருகின்றன. அந்தச் சர்வதேச சகோதரத்துவ உணர்வு வரவேற்கத்தக்கது. இந்நாடுகள் உணவு நிவாரண நடவடிக்கையில் மட்டுமல்ல. உரிமைகள் இழந்து வாழும் இனங்களின் நியாய நிலைக்கும் ஆதரவு தருவனவாக இருக்கின்றன.

### அரசியல் நிலை

இந்நாட்டில் அரசகரும மொழியாகச் சிங்களமே உள்ளது. தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்து வழங்கப்படவேண்டும். அரசியல் சாசனத்தில் இந்த மொழி தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும்.

தமிழுக்கு நிர்வாக மொழி அந்தஸ்தைத் தரவேண்டும் என்பது மிக நியாயபூர்வமான ஒரு கோரிக்கையே ஆகும். தமிழ் மக்கள் இன்று கடும் சோதனைக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

சிங்களச் சகோதரர்களுடன் ஒத்துழைத்து நமது பிரச்னைகளைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டவர்களில் நானும் ஒருவன்.

தமிழ் மொழிக்குப் பிரதேச, தேசிய அந்தஸ்து வழங்கி, நீதியை நிலைநாட்டப் பச்சை, நீல அரசாங்கங்களோ அல்லது சிவப்புடன் கலந்த அரசாங்கமோ முன்வராதது வெட்கக்கேடான விஷயமாகும்.

### வாசுதேவ, விஜேவீர கருத்துக்கள்

இக்கட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவ நாணயக்கார அண்மையில் விடுதலையான ஜாதிக விமுக்தி பெரமுனைத் தலைவர் திரு. ரோஹண விஜேவீர போன்ற தலைவர்கள் ஆற்றியுள்ள உரைகள் நமக்கு நம்பிக்கையூட்டுவனவாக உள்ளன. தமிழரின் அடிப்படை சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டும் என்ற அவர்களது இப்புதிய குரல் நமக்கு நம்பிக்கை தருவதாக உள்ளது.

எமது உமைகளை அங்கீகரிப்பவர் யாராக இருந்தாலும் அது அங்கீகரிக்கப்படவேண்டியதுதான்.

### நம்பிக்கை தருகிறது

சிங்கள மக்களுடன் ஒத்துழைத்து விடிவு பெறலாம் என்ற நம்பிக்கையில் இடிவிழுந்துள்ள இந்நேரத்தில் இந்த இடதுசாரித் தலைவர்களின் நிலைப்பாடு வரவேற்கப்படவேண்டியதுடன் நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது.

### கூட்டணியும் ஏற்கும்?

அத்தகைய நோக்கங்கள் ஆட்சிபீடக் கொள்கையாக மாறுவதற்கு நாமும் உதவ வேண்டும் என யாராவது கூறுவார்களாயின் அதற்கு நான் தயாராக இருக்கிறேன். அந்நிலையை உணர்ந்து ஏற்பது நியாயம் என்று நான் கூறமுற்படுவதுடன் தமிழ்ப்பேசும் மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்று ஜனநாயக சக்தியாக விளக்குகின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர்கூட இத்தகைய நிலையை வரவேற்பர் என்பது என் நம்பிக்கை.

தமிழர்களைத் தனியினமாக ஏற்று அவர்கள் மார்க்ஸிஸ, லெனிஸிஸ கண்ணோட்டத்தில் சுயநிர்ணய உரிமை அங்கீகாரத்தை அளிக்க முன்வந்திருப்பது நம்பிக்கையைத் தருவதாக உள்ளது

### இன்பநாடாகத் திகழ...

தமிழ் மக்களின் மத்தியில் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்றுள்ள த. வி. கூட்டணியை ஒரு ஜனநாயக சக்தியாக ஏற்கத் தமிழ்ப் பேசும் மக்களுடன்தெல்னிலங்கையில் எழுச்சி பெறத் தக்க புதிய சக்திகள் தந்துள்ள குரல் தெற்கிற்கும் வடக்கிற்கும் ஒருபாலமாக, அரசியல் இணைப்பாக அமைவதன் மூலம் தான் நாமனைவரும் விரும்பும் ஓர் வறுமையற்ற சமத்துவ சமூகத்தை, கொடுமையற்ற ஓர் இனவிடுதலை கண்ட ஓர் இன்ப நாடாக அமைக்க முடியும்.''

இவ்விழாவில் திருமதி புவனேஸ்வரி பொன்னம்பலம் பரிசில்களை வழங்கினார்.

(உ)

# போதைவஸ்து கடத்தல்: பொலிசார் தீவிர கவனம்

(கொழும்பு)

அபின், கஞ்சா போன்ற போதை வஸ்துகளைக் கடத்துபவர்கள், வைத்திருப்பவர்கள் மீது பொலிஸார் தீவிர கவனம் செலுத்துவர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், இலங்கைப் போதை வஸ்துத் தடுப்புச் சங்கத்தின் தலைவருமான திரு. வெரப்பிட்டியா. பொலிஸாருக்கு இப்பணிப்பை விடுத்துள்ளார்.

வடமத்திய மாகாணத்திலும் மற்றும் பல பகுதிகளிலும் காடுகளில் கஞ்சா பெருமளவில் பயிரிடப்படுவதாகவும், பெரும் முதலாளிகள் பலர் இதில் ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

பெருமளவு அபின் இந்தியாவிலிருந்து இங்கு கடத்தப்படுவதாகவும் இப்போது. புகையிரத மூலமான பயணம் இந்தியாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் இக்கடத்தல் அதிகரிக்கலாமென்றும் இதைத் தடைசெய்வதற்காகத் தலைமன்னாரில் பொலிஸ், சுங்கச் சோதனைகள் பலப்படுத்தப்படுமென்றும் போதை வஸ்துத் தடுப்புச் சங்கத்தின் செயலாளரான குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, போதிய செலாவணியின்றி இங்கு வரும் ஹிப்பிகள் பெருமளவு போதை வஸ்துகளைக் கொண்டு வந்து பணம் பெறுகிறார்கள் என்றும் செலாவணியின்றி வருபவர்களை நாட்டினுள் அனுமதிக்கவிடாது திருப்பி அனுப்பும்படியும் பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார். (ம-இ)

# ''தமிழ்ப்பிரதேசங்களில் தொழிற்சாலை நிறுவுங்கள்''

## வர்த்தகப் பிரமுகர்களுக்கு யாழ். எம். பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''வேலையில்லாதிருக்கும் இளைஞர்களும் பட்டதாரிகளும் பயனுறத்தக்கவகையில் குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு வங்கிகள் அவர்களுக்கு கடன் வசதி அளிக்கவேண்டும். நமது வர்த்தகர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் தொழிற்சாலைகளை நிறுவவேண்டும்.''

யாழ்ப்பாணம் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் இலங்கை வங்கியின் 496வது கிளையை யாழ் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது!

''வங்கிகள் மக்களின் சொத்து. எனவே வங்கிகளைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு மக்களுக்குரியது. அதேவேளை வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் வங்கிகள் உதவ முன்வரவேண்டும், ஏனெனில் ஒரு அரசு நீண்டகாலம் நிலைத்திருப்பதற்கு இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும். வங்கிகள் மூலம் வேலையில்லாதிருக்கும் இளைஞர்களின் பிரச்னைக்குத் தீர்வுகாணும் புதுத் திட்டமொன்று உருவாக்கப்படவேண்டும்.

எமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் தமிழ்ப்பிரதேசங்களில் தொழிற்சாலைகளை நிறுவுங்கள் என வர்த்தக பிரமுகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதன்மூலம் நீங்கள் தமிழ்இனத்தின் வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப்பெறமுடியும்.

யாழ். எம். பியும் யாழ். பொலிஸ் அதிபரும் சம்பிரதாயபூர்வமாக குத்துவிளக்கேற்றிவைத்தனர்,

வங்கியின் முதலாவது கணக்குவைப்பை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆரம்பித்துவைத்தார் வர்த்தகப் பிரமுகர் திரு. செல்லப்பா முதலாவது கணக்கு வரவை யாழ். எம். பியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கூறியதாவது;-

''இன்றைய சூழ்நிலைகளைப் பயன்படுத்தி தமிழ்ப் பிரதேசங்களில் கைத்தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முயல வேண்டும்.

### மாவட்ட அமைச்சர் பதவி

''மாவட்ட அமைச்சர் பதவிகளைத் தமிழ்ப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டால் நலமாக இருக்கும். ஆயினும் அப்படி ஏற்பதற்கு அவர்களுக்கு இடையூறுகளிருக்கும்பட்சத்தில்தமிழ் அரசாங்க ஊழியர்கள் இப்பதவியைப்பெறக்கூடிய வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தாலே எமது பிரதேச அபிவிருத்தி சிறப்படையும்.

''யாழ். வர்த்தகர் சங்கவர்த்தகர்கள் ஒன்றிணைந்து ஒரு கைத்தொழில் பேட்டையை ஏற்படுத்த முயற்சிக்கிறோம்.''

வங்கி முகாமையாளர் திரு. எஸ். ஜெகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். (கி-அ)

# பங்கீட்டுச் சீனி விநியோகம் சீரில்லையாம்

(நெல்லியடி)

பங்கீட்டுச் சீனி, நுகர்ச்சியாளர்களுக்கு ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று நெல்லியடிப்பகுதியிலுள்ள மக்கள் குறைகூறுகின்றார்கள்.

அந்தந்த மாதத்திற்குரிய சீனியே இவ்வாறு காலங்கடத்தி வழங்கப்படுகின்றதாம். புரட்டாதி மாதத்திற்குரிய பங்கீட்டுச் சீனி இம்மாதமே வழங்கப்பட்டதாம். ஆனால் இம்மாதத்திற்குரிய சீனி அடுத்த மாதம் வழங்கப்படும் என கிளை முகாமையாளரால கூறப்படுகின்றதாம். புள்ளிகளும் எடுக்கப்பட்டு எந்தப் பற்றுச்சீட்டும் வழங்கப்படுவதில்லையாம்.

இவ்வொழுங்கீனம் கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. ச. எல்லைக்குள் உள்ள கிளையொன்றிலே நடைபெறுகின்றதாம்.

(உ)

### யாழ். லீக்கின்

# 'நொக்கவுட்' உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், வருடாந்தம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி இன்று முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

இன்றைய போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி கழகம் மோதுகின்றது.

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
"HOLIDAY ON THE BUSES"
Full Comedy color

French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
18-11-77 WOMAN AT HER WINDOW
21-11-77 MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. பாலசந்தரின்
சொல்லத்தான் நினைக்கிறேன்
(புதியபிரதி)

கடைசி வாரம்
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

கடைசி வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராஜா- யாழ்நகர்
ஐந்தாவது வெற்றி வாரம்!
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]



## ஆசிரியருக்குக் கடிதம்

# மிரட்டலுக்கு எம். ஜி. ஆர். பணியமாட்டார்!

திருச்சி, மதுரையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் என்னும் போர்வையில் கல்லெறி, சோடாப்போத்தல் வீச்சு, சைக்கிள் செயின் தாக்குதல்களை தி. மு. க. வினர் நடத்தியிருக்கிறார்கள். அதற்கு மேலாக தனி மனிதனின் பேச்சுச் சுதந்திரத்தை தி. மு. க. வினர் பறித்து இருக்கின்றனர். பல காங்கிரஸ் ஆதரவாளர்கள், ஏன் அப்பாவி மக்கள் கூட மண்டை உடைக்கப்பட்டிருக்கின்றனர். பெண்கள் இரத்தம் சொட்டச் சொட்ட விரட்டி அடிக்கப்பட்டிருக்கின்றனர். இப்படி செய்திகளை முதல்வர் எம் ஜி. ஆர். கேட்டுவிட்டு ஏற்ற நடவடிக்கையும் எடுக்காமல் சும்மா இருக்கும்படியா ராஜ்நாரயணன் கூறுகிறார். நெருப்புப் பற்றி விட்டதானால் தண்ணீர் ஊற்றவேண்டும் என்று எல்லோருக்கும் தெரியும். இதில் யாரும் யாருடைய ஆலோசனையும் பெறவேண்டிய அவசியம் இல்லை. இந்திரா சாதாரண பிரஜையாம். இவரை எம். ஜி. ஆர். ஏன் சந்தித்தார் என்று கோபிப்படைந்திருக்கிறார். இந்திரா சாதாரண பிரஜை எந்தப்பதவியிலும் இருப்பவர் அல்லத்தான். ஆனால் இதேபோன்ற கிருபளானி, ஜெயப்பிரகாஷ் நாரயண் போன்றவர்களை இந்தியாவின் எல்லா முதல்வர்களும் ஏன் மத்தியமந்திரிகளும் பிரதமனுங்கூட வரவேற்கிறார்களே? இதுமட்டும் நியாயமா? இந்திராவை வரவேற்பதா, இல்லையா என்பது எம். ஜி. ஆரினதும் தமிழ் நாட்டு மக்களினதும் சொந்த விடயம். இதில் ராஜ்நாரயண் தலையிடவேண்டிய அவசியம் இல்லை. தன்சிறுநீரை தான் அருந்தும் மருத்துவமுறையை ஆராயும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட ராஜ்நாராயணன் போன்றசுகாதார மந்திரிகளின் மிரட்டல்களுக்கு எம். ஜி. ஆர். பயப்படமாட்டார். இவர்களால் எம். ஜி. ஆரையும் பதவியையும் பிரிக்க அதிகாரம் இருக்கலாம் ஆனால் எம். ஜி. ஆரையும் மக்களையும் பிரிக்கமுடியாது.

செல்வம்
யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன் -சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசிங்க - சன்ஜே
தில்லகி
(ஹிந்தி)

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
எம், ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம்சுற்றும் வாலிபன்
(கலர்)

# நம்கண்ணீரைத் துடைக்கும் கரம் கலைஞருடையது!

கல்லெறிவது ஜனநாயகம் இல்லையென்று செல்வம் 3-11 77 திகதி பத்திரிகையில் எழுதியிருந்தார். உண்மைதான். ஆனால் அதைவிட அவசரகாலச் சட்டம்; மிசாசட்டம் என்பனவற்றின் மூலம் ஏராளமான எதிர்க்கட்சியினரைக் கைது செய்தனரே; எம்தமிழ்காவலன் கலைஞரின் ஆட்சியை அநியாயமாக கவிழ்த்தனரே. அதன் பின் சாதாரண ஒருபிரசையாக கருணாநிதி இருந்தும்கூட அவர் சென்ற இடமெல்லாம் கறுப்புக்கொடிகாட்டி; ஊழல் வாதி, கிரிமினல் குற்றவாளி என்றெல்லாம்வசைபாடினரே: ஆட்சிமமதையில்; இவையெல்லாம் செல்வம் அவர்களின் அகராதியில் ஜனநாயக வழிகளோ? இந்திராவுக்கும் ஜனநாயகத்திற்கும் என்ன சம்பந்தம்? என்றோ ஜனநாயகத்தைக் கொலைசெய்து சர்வாதிகாரத்தின் உச்சியில் நின்று ஆட்சி மமதையில் பேயாட்டம் ஆடிய இந்திராவை ஜனநாயகத்துடன் தொடர்புபடுத்தலாமா?

லோகசபைத் தேர்தலில் கருணாநிதியின் தோல்வியை எழுதியிருந்தார். இந்திரா என்ன வென்று விட்டார்? அவரதுகட்சி தோற்றது மட்டுமன்றி அவரும் அல்லவா தோற்அடிக்கப்பட்டார்: இந்த வகையில் கருணாநிதி எவ்வளவோ மேல். 1971-ம் ஆண்டு சட்டசபைத்தேர்தலில் 15 ஆயிரம் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்ற கருணாநிதி 1977-ம் ஆண்டில் 25 ஆயிரம் பெரும்பான்மை வாக்குகள் பெற்றிருக்கின்றார்.

மக்கள் கூட்டத்தைப் பற்றி எழுதியிருந்தார் தமிழ்நாட்டு சனத்தொகை விதத்தின்படி 30 ஆயிரம் மக்கள் எந்த மூலைக்கு. கருணாநிதி வைக்கும் சாதாரண கூட்டங்களிற்கே 2 லட்சம்; 3 லட்சம் என்று கூடுவார்களே, கூட்டத்தைக் கொண்டு எதையும் கணக்கெடுக்கமுடியாது.

பெண்களைப் பற்றி எழுதியிருந்தார். சிட்டிபாபு; சாத்தூர் பாலகிருஷ்ணன் என்பவர்களின் துணைவியரின் மாங்கல்யம் இழக்கவைத்து அநியாயப் படுகொலைகள் புரிந்த இந்திராவும் ஒரு பெண்ணா?

மொத்தத்தில் தமிழ்நாடு வந்த சர்வாதிகாரியை ஊழலின் சிகரத்தை; அராஜகத்தின் முழுவடிவை தமிழர் தலைமகன் டாக்டர் கலைஞர் கருணாநிதியின் தி. மு. க. எதிர்த்ததில் இம்மியளவில்கூட தவறே இல்லை தாம் ஏன் எதிர்ப்புத் தெரிவிப்பதாக கருணாநிதி விட்ட அறிக்கையை செல்வம் அவர்கள் படிக்கட்டும்.

கலைஞர்மீது ஈழத்தமிழர் யாராவது தவறான அபிப்பிராயம் உடையவராயின் தயவுசெய்து அவர்கள் அவ்வெண்ணத்தை மாற்றிக்கொள்ளட்டும். நாம்அழுகின்ற நேரமெல்லாம் அலைகடலுக்கு அப்பால் இருந்து நம் கண்ணீரைத் துடைக்க உயர்த்துகின்ற கரம் கலைஞரின் கரம்தான்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்-உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

ப. பரந்தாமன்
சாவகச்சேரி.

# 1000 பஸ் செலிகள் இறக்குமதி

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் ஆயிரம பஸ் அடிச் சட்டங்கள் இறக்குமதி செய்யப்படுமென்று போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச் முகமட் தெரிவித்தார்.

......

# நோயாளர் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் உள்ள பொலிஸ் பிரிவில் கடமையாற்றுவதற்கு சிங்களப் பொலிசாரே பெரும்பாலும் அமர்த்தப்படுவதால் பாஷைபுரியாது நோயாளிகள் பெரிதும கஷ்டமுறுகின்றனர். எனத் தெரிவிக்கப்படுகிறது

நோயாளிகளின் வாக்குமூலங்களைத் தமிழில் பதிவு செய்யக்கூடிய பொலிஸ் உத்தியோகத்தரை ஆஸ்பத்திரியில் கடமையில் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (உ)

# புயல் அகதிகளை எம். ஜி. ஆர். பார்வையிட்டனர்

தஞ்சாவூர், நவ. 13

தஞ்சாவூரில் புயலால்பாதிக்கப்பட்ட இடங்களை தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் விமானப் படை விமானத்தில் சென்று பார்வையிட்டார்.

அவருடன் உணவு மந்திரி திரு எட்மண்டும் சென்றிருந்தார்.

இதேவேளையில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமானம மூலம உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (இ)

......

## மாவட்ட...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காரணமென்றும் இனியும் இத்தவறை விடக்கூடாதென்றும் கூட்டணிக்குள் அபிப்பிராயம் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

நோர்வே நாட்டினர் தமிழ் அகதிகளைக்குடியேற்றி மாதிரிக் கிராமமொன்றை அமைக்க முன்வந்துள்ள போதிலும் அதற்கு அரசாங்கம் இன்னமும் அனுமதி வழங்காமலிருப்பது ஒன்றே மாவட்ட மந்திரிப்பதவியை ஏற்று தமிழ்மாவட்டங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டுகின்ற கருத்தும் கூட்டணிக்குள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் பேரவைக்குழு நாளைக் காலைகூடும்பொழுது மாவட்ட மந்திரிகள் பற்றிய பிரச்னை பற்றியும் ஆராயுமென்று அறியப்படுகிறது.

**மணிவாக்கு**

அளவுக்கடங்காப் பொறுமையைத் தன்மாட்டுக் குணமாய மையாத ஒருவன் அகிம்சையைச் சாதிக்க முடியாது.

— காந்திமகான்.

ஈழநாடு
The Eelanaadu

# மாவட்ட மந்திரிகள்

ஒவ்வொரு அமைச்சுக்களின் அலுவல்களையும் கவனிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேரவை உறுப்பினர்கள் தனித்தனியாக் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயக நாடுகள் ஒவ்வொன்றிலும் எதிர்க்கட்சி இப்படி ''ஷடோ கபினட்'' என்று சொல்லப்படும் நிழல் அமைச்சரவையை நியமிப்பது வழக்கம்.

எதிர்க்கட்சி ஆளும்கட்சியாக மாறுவதும் ஆளும் கட்சி எதிர்க்கட்சியாகமாறுவதும் இந்தநாடுகளிலுள்ள அரசியலமைப்பும் பார்லிமெண்ட் உறுப்பினர் எண்ணிக்கையும் வழிவகுத்துள்ள முறை.

இலங்கையைப் பொறுத்த வரையில் இப்போது பிரதான எதிர்க்கட்சியாகஇருக்கின்ற தமிழர்விடுதலைக்கூட்டணி ஒருபோதுமே இந்த நாட்டின் ஆளும்கட்சியாக வரமுடியாது.

வெள்ளையர்கள் ஏற்படுத்தித் தந்த ஜனநாயகம் நமது நாட்டைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை ஜனநாயகம்தான்.

இன்றுள்ள நிலையில் இந்த அமைப்புக்குள் தமிழ்மக்கள் எவற்றை அடைய முடியுமோ அவற்றை அடைவதற்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதுதான் விவேகம்.

ஒவ்வொருஅமைச்சும் எப்படிச் செயல்படுகிறது; அவற்றின் மூலம் தமிழ்மக்களுக்கு எந்தெந்த வகையில் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கலாம்; தமிழ்ப்பகுதிகளை எந்தெந்தவகையில் அபிவிருத்தி செய்யலாமென்பது பற்றி அமைச்சுக்களை நிழல்போல் தொடர்ந்து கவனிப்பதற்கு பேரவை உறுப்பினர்களுக்குத் தனித்தனியாக அமைச்சுக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி ஒதுக்கிக்கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அமைச்சர்கள் கூட்டுப் மாநாடுகளில் கலந்துகொள்வது; அமைச்சர்களைக் கூட்டணி எம். பி.க்கள் சந்திப்பது சம்பந்தமாக எழுந்த பிரச்னையைத் தொடர்ந்தே இந்த ''நிழல்அமைச்சு'' நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

காரணம் எதுவாக இருந்தாலும் காரியம் நல்லதே.

அரசாங்கம் நியமிக்க உத்தேசித்துள்ள மாவட்ட மந்திரி பதவிகளை ஏற்பதாஇல்லையா என்பதுபற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி இன்னமும் முடிவு செய்யவில்லை.

கடைசி நேரத்தில்தான் இது பற்றி முடிவு செய்யப்படவேண்டுமென்றகட்டாயமுமில்லை.

தொகுதிகளின் அபிவிருத்தி சம்பந்தமாகஅமைச்சுக்களின் நடவடிக்கைகளைக் கவனித்து அமைச்சர்களைச் சந்தித்துக் குறைகளை எடுத்துக் கூறி நிவாரணம் தேடுவதற்குப் பதிலாக தொகுதிகளை உள்ளடக்கிய மாவட்டங்களைஅபிவிருத்திசெய்யக் கூடிய அதிகார பூர்வமான மாவட்ட மந்திரிப்பதவியை ஏற்பது மேலானதல்லவா?

சுவீடன் சர்வதேச கூட்டுறவு அபிவிருத்தி மந்திரி தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவரும் கூட்டணியின் பேரவைக் குழுவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கத்தைப் பேரவைக்கட்டிடத்திலுள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசியபோது வெளிநாட்டு உதவிகள் தமிழ்ப்பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லையென்று திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியதுடன் தமிழ் மக்களின் பிரச்னைகளையும் விரிவாக எடுத்துக்கூறினார் என்ற செய்தி மிகக் காத்திரமானது.

திரு. அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால்தான் இந்தச் செய்தி முக்கியத்துவம்பெற்றது.

இதைப் போலவேதான் மாவட்டமந்திரிப் பதவியையும் தமிழர் விடுதலைக் கூட்டணி பயன்படுத்தவேண்டும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் என்றகேலிக்கு இடமளிக்கக் கூடாது!

# இலங்கையில் நடைபெறும் கல்வி அமைச்சர்கள் மாநாடு

(கொழும்பு)

ஆசிய நாடுகளின் கல்வி அமைச்சர்களினதும், பொருளாதார திட்டமிடலுக்குப் பொறுப்பாகவுள்ளவர்களினதுமான மாநாடு இலங்கையில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கிறது.

'யுனெஸ்கோ' நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அடுத்த ஆண்டு ஜூலை இறுதிவாரத்தில் நடைபெறும்.

உறுப்பு நாடுகளின் கல்வித் துறையை சமூக, பொருளாதார, கலாச்சார அபிவிருத்திகளுடன் தொடர்புடையதாக மாற்றியமைப்பது தொடர்பான மதிப்பீடுகள் இம்மாநாட்டில் ஆராயப்படும்.

இலங்கை உட்பட சுமார் 25 நாடுகள் பங்குபற்றும் இம் மாநாட்டில், அரசுசார்பற்ற பல நிறுவனங்களும் பார்வையாளர்களாகப் பங்குபற்றும்.

'யுனெஸ்கோ' மாநாடுகள் பிரிவின் இயக்குனரும், யுனெஸ்கோ, பாங்கொக் பிராந்திய திருவாக அலுவலரும் அண்மையில் இலங்கை வந்து கல்வி அமைச்சின் செயலாளர் திரு. டி. எம். பி. பி. தசநாயக்காவுடன் மாநாடு தொடர்பான பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

திட்டமிடல்அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, உல்லாசப் பயணச்சபை, ஹோட்டல்கள் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். (ம-அ)

## ரூ. 49 ஆயிரம் ஷேர்ட் துணி கடத்தல்

[கொழும்பு]

2 ஆயிரத்து 450 யார் பொலியஸ்டர் ஷேர்ட் துணியை சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற இளைஞர் ஒருவர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டார்.

இந்த இளைஞருக்கு ஒரு லட்சத்து 47 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டன. 49 ஆயிரம் ரூபா பெறுமதியான துணியும் பறிமுதல் செய்யப்பட்டது. ... [இ]

## இவர்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தனர்.

இத்திடீர் இடமாற்ற உத்தரவு இ. போ. ச. ஊழியர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## நகரின் சிலஇடங்களில் மின்சாரத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று சில இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது. இன்றும் இத் தடைதொடர்ந்திருக்குமெனத் தெரியவருகிறது.

கன்னாதிட்டியிலுள்ள உப-நிலையத்தில் உள்ள மின்சார சபை பகுதியில், மின் ஒழுக்கு ஏற்பட்டதால் கேபிள் எரிந்ததன் காரணமாக இந்த மின்சாரத் தடை ஏற்பட்டது.

நேற்று நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன் துறை வீதி, மகாத்மா காந்தி வீதி, பலாலி வீதியில் சிலபகுதிகள் மின்சாரத்தடை ஏற்பட்டது. இப்பகுதிகளில் இன்றும் தொடர்ந்து மின்சாரத்தடை இருக்குமெனக் கூறப்படுகிறது.

மின்சார உபகரணமொன்று பெறுவதில் தாமதமேற்பட்டுள்ளதால், இம்மின்சாரத் தடை நீடிப்பதாகக் கூறப்படுகிறது. (க-அ)

## யாழ். விசேட ஆணையாளர் உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் பல இடங்களில், ஏற்பட்டுள்ள மின்சாரப் பாதிப்பை யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் நேற்றுப் பார்வையிட்டார்.

இப்பாதிப்புக்களை உடன் நிவர்த்தி செய்வதற்காக இரு விசேஷ குழுக்களை விசேஷ ஆணையாளர் நியமித்துள்ளார்.

இவ்விரு குழுக்களைத்தவிர, நிரந்தரக்குழு ஒன்றும் நாள் முழுவதும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

மின்சாரம் பாதிப்பு ஏற்பட்ட இடங்களுக்கு இக்குழுக்கள், நேரடியாகச் சென்று கடமையாற்றிவருகிறது.

## தேடப்பட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

பல்வேறு குற்றங்கள்தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த இளைஞர் ஒருவர் சிறுப்பிட்டியில் வைத்துப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

கோப்பாய் பொலிசார் ரோந்து சுற்றச்சென்ற சமயம் இந்த இளைஞரைக் கைதுசெய்தனர். (க-அ)

## 'கலைஞரை விடுதலை செய்க'

(சுழிபுரம்)

கலைஞர் மு. கருணாநிதியை விடுதலைசெய்து, தமிழ்நாட்டில் அமைதியை நிலைநாட்டுமாறு கோரும் ஒரு வேண்டுகோளை வழக்கம்பறை தமிழ் மன்றத்தினர் தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அனுப்பியுள்ளனர்.

# கத்திக் குத்துக்கு விவசாயி பலி!

## உறவினரை பொலிஸ் தேடுகிறது

[யாழ்ப்பாணம்]

விவசாயி ஒருவர் அவரது தோட்டத்தில் வைத்துக் கத்திக் குத்துக்குப் பலியானார். சந்தேக நபரான அவரது உறவினர் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

நீர்வேலி சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த செல்லப்பா சின்னப்பா [வயது 52] என்பவரே அவரது தோட்டத்தில் கத்திக்குத்துக்கு இலக்கானார்.

உடனடியாக யாழ். பெரிஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

காலை 6 மணிக்கு இறந்தவர் தோட்டத்திற்கு கூலி ஆட்களைப் பிடிக்கச் சென்றதாகவும், தோட்டத்திலிருந்து அவர் வராததினால் மகன் தேடிச் சென்றபோது 'ஐயோ' என்ற சத்தம் கேட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

சந்தேக நபரான சி. சுந்தரலிங்கம், கத்தியால் இடது கையில் குத்தியபோது சின்னப்பா விழ மீண்டும் இடது மார்பில் குத்திவிட்டு ஓடியதாகவும், விசாரணையில்மேலும் கூறப்பட்டது.

சந்தேகநபர் ஓடிச் சென்றதை கெங்காதரம் என்பவர் கண்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார். [க-அ]

## அவுட்-ஒப் ஓடர்

[யாழ்ப்பாணம்]

யாழ். தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திலிருந்து நேற்று பெரும்பாலான இடங்களுக்கான தொலைபேசி அழைப்புக்களுக்கு 'அவுட் ஒப்-ஓடர்' என்ற பதிலே வந்தது கொண்டிருந்தது.

மன்னார், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை காரைநகர், அனலைதீவு, கொடிகாமம், பண்டத்தரிப்பு, புங்குடுதீவு, ஆகிய இடங்களுக்கான தொலைபேசி இணைப்புக்கள் நேற்று பகலிலிருந்தும் கொழும்பு, வவுனியா, அனுராதபுரத்துக்கான இணைப்புக்கள் மாலை 6 மணியிலிருந்தும் இயங்கவில்லை.

இதன்காரணமாக வடபகுதியில் அநேக இடங்களுக்கும் கொழும்பு, மட்டக்களப்பு, திருக்கோணமலை, கண்டி ஆகிய முக்கிய நகரங்களுக்கும் தொலைபேசி மூல தொடர்பு கொள்ள முடியாத துரப்பாக்கிய நிலை பாவனையாளர்களுக்கு ஏற்பட்டது. [இ]

## புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

சிநோர் அபிவிருத்தித்திட்ட பொறியியலாளர் திரு. க. சரவணமுத்து தொழில் பொறி முறைக்கல்வி உயர்படிப்புக்காக இம்மாதம் 17-ம் திகதி ஜப்பான் செல்கிறார்.

## ஈழத்தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைகளும் இலங்கையின் இன மோதல்களும்' 'ஈழத்தின் கனிவளமும் ஈழ அரசும்' என்ற தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு இவ் விடயங்கள் பற்றி ஆராயப்படும். [க-அ]

## தமிழிசை விழா

சென்னை, நவ. 13

சென்னை தமிழ்இசை மன்றத்தின் 39வது தமிழ் இசை விழா அடுத்தமாதம் 23ம் திகதி ஆரம்பமாகிறது.

தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இவ் விழாவை ஆரம்பித்து வைப்பார். (இ)

## தவறிவிட்டது

வோக்ஸ்வாகன் 4 ஸ்ரீ 8159 வீல் கப் & கப்பிளேட் இரண்டும் இளவாலை, சேந்தாங்குளம், கீரிமலை ரோட் வழியில் தவறி விழுந்துவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் சி. எஸ். கே. மில், யாழ்ப்பாணத்தில் கொடுத்துத் தகுந்த சன்மானம் பெறவும். 7670

# கர்ப்பிணிப் பெண்ணுடன் இரு இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

நிறை மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவருடன் இரவில் சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்டதாகக் கூறப்படும் இரு இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுப்பிட்டியில் இச்சம்பவம் நிகழ்ந்ததாம்.

ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டிருந்த கோப்பாய்ப் பொலிசார் இவர்களைக் கைதுசெய்தனர்.

விசாரணையின்போது சித்தி அமீரா (23 வயது) என்ற 9 மாதக் கர்ப்பிணி மணமாகாதவரென்றும் சுந்தளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்றும் தெரியவந்ததாம்.

க. சுப்பிரமணியம், என். விவேகானந்தன் என்ற பிரஸ்தாப இருஇளைஞர்களும் காவலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி இளம் பெண் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். [அ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கே.கே.எஸ் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ந் திகதியச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.